# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு டிசம்பர்–11ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.10மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

**1)** கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) திட்டம் 2020–2021ன் கீழ் ரூ.**26.50**கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3, நாள்.11.12.2020ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| கரூர் | 26.50 | 22.53 | 3.97 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | <u>சிப்பம்–1</u><br><br>வார்டு எண்.1 மற்றும் 2ல் உள்ள கோதை நகர் மெயின் ரோடு, குறுக்குத் தெரு, கே.பி. நகர் குறுக்கு தெரு, வடிவேல் நகர் மெயின் ரோடு, வடிவேல் நகர் குறுக்கு தெரு, திருக்காம்புலியூர் குறுக்குத் தெருக்கள் மற்றும் திருக்காம்புலியூர் மாரியம்மன் கோவில் ரோடு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.130 | 3.00, 4.50, 5.00 & 7.00 | 228.00 |
| 2 | <u>சிப்பம்–2</u><br><br>வார்டு எண்.3, 5, 6 மற்றும் 7ல் உள்ள எல்.ஜி.பி. நகர் கிழக்கு சாலை, இராமகிருஷ்ணபுரம், செங்குந்தபுரம், முத்து நகர் சாலைகள், திரு நகர் குறுக்கு தெருக்கள், கணேசா நகர், பாரதியார் தெரு, காமராஜர் தெரு, காயத்ரி நகர், பிள்ளையார் கோவில் தெரு, சின்னகுளத்துபாளையம், பெரியார் சாலை மற்றும் பிட்டர் பழனியப்பா தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.700 | 4.50 & 6.00 | 223.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | **<u>சிப்பம்–3</u>**<br><br>வார்டு எண்.7, 9, 11, 12, மற்றும் 14ல் உள்ள வள்ளுவர் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, திட்ட சாலை மேற்கு தெரு, சோழன் நகர், பாரதியார் நகர், ஜீவா நகர், பாலகிருஷ்ணா நகர், கொங்கு நகர் மற்றும் குறுக்கு தெருக்கள், எஸ்.பி. காலனி குறுக்கு தெரு, என்.எஸ்.கே. மெயின் ரோடு மற்றும் கலைஞர் சாலை ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.030 | 4.00,<br>5.00,<br>6.00 &<br>6.50 | 219.00 |
| 4 | **<u>சிப்பம்–4</u>**<br><br>வார்டு எண்.17, 18, 20, 22, 23 மற்றும் 25ல் உள்ள இராமகிருஷ்ணபுரம் குறுக்கு தெருக்கள், செங்குந்தபுரம் குறுக்கு தெருக்கள், சின்னாண்டாங்கோவில் மெயின் ரோடு, பிரம்மதீர்த்தம் மெயின் ரோடு, லட்சுமிபுரம் வடக்கு மற்றும் தெற்கு, குருநாதன் தெரு, மாவடியான் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3.895 | 5.50,<br>6.50,<br>7.50 &<br>8.00 | 235.00 |
| 5 | **<u>சிப்பம்–5</u>**<br><br>வார்டு எண்.25, 27, 29, 30, மற்றும் 31ல் உள்ள முல்லா சாகிப் தெரு, கெந்தபொடிக்கார தெரு மற்றும் குறுக்கு தெருக்கள் மற்றும் பாரதியார் தெரு, கூத்தரிசிக்கார தெரு, குமரன் பள்ளி முதல் பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப் பள்ளி வரை, பண்டரிநாதன் கோவில் தெரு, பாரதியார் குறுக்கு தெரு, திருமாநிலையூர் மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெருக்கள், தாந்தோணி குடித் தெரு, அருணாசல நகர் 4வது, 5வது குறுக்கு தெருக்கள், அருணாசல நகர் விஸ்தரிப்பு சாலை, மற்றும் பசுபதிபாளையம் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 4.925 | 3.00,<br>5.00 &<br>6.00 | 233.00 |
| 6 | **<u>சிப்பம்–6</u>**<br><br>வார்டு எண்.33, 35, 36, 37 மற்றும் 38ல் உள்ள சணப்பிரட்டி மெயின் ரோடு, சிலோன் காலனி ரோடு, நல்லப்பா நகர், ஏ.டி. காலனி, நரிகட்டியூர் TNHB காலனி, எம்.ஆர். நகர் சாலை, ஆர்.ஏ. நகர் சாலை, கிருஷ்ணா நகர், முத்து நகர், ஜி.ஆர். நகர் சாலைகள், தெற்கு காந்திகிராமம் TNHB குடியிருப்பு சாலை, கே.கே. நகர், சிவாஜி நகர் மெயின் ரோடு மற்றும் பழனியப்பா கார்டன் சாலை ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 6.360 | 4.00 &<br>5.00 | 250.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | **சிப்பம்–7**<br><br>வார்டு எண்.39, 42, 43, 44, 46 மற்றும் 47ல் உள்ள சிவசக்தி நகர் கிழக்குபகுதி சாலை, பழைய சுக்காலியூர் சாலை, கோடங்கிபட்டி முதல் ஈசநத்தம் மேற்கு சாலை வரை, சவுரிமுடி தெரு, பாரதிதாசன் நகர் குறுக்குத் தெருக்கள், காந்தி நகர் 1, 2, 3ல் உள்ள குறுக்கு தெருக்கள் மற்றும் காமராஜர் நகர் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 5.670 | 3.00,<br>4.00 &<br>4.50 | 237.00 |
| 8 | **சிப்பம்–8**<br><br>வார்டு எண்.44, 45, 47 மற்றும் 48ல் உள்ள வெள்ளகவுண்டன் நகர் குறுக்கு தெருக்கள், வடக்கு தெரு மற்றும் குறுக்கு தெரு, சின்னமநாயக்கன்பட்டி குறுக்கு சாலை, அண்ணா நகர் குறுக்கு சாலைகள், கோடங்கிப்பட்டி சாலை, மட்டிபள்ளம் சாலை, விக்னேஸ்வரா நகர் சாலை, விஜயாலம்மன் நகர் சாலை மற்றும் காளியப்பனுார் மேற்கு சாலைஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை புதியதாக தார் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் இல்லாத பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 5.400 | 4.00 | 225.00 |
| 9 | சிப்பம்–9<br><br>வார்டு எண்.1, 2, 3, 4, 6, 7, 9, 11 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் உள்ள கோதுார் ஏ.டி. காலனி, அரிக்காரம் பாளையம் குறுக்கு தெருக்கள், ராஜா மண்டபம் தெரு, வாய்க்கால் மேடு, வையாபுரி நகர் குறுக்கு தெருக்கள், பிள்ளையார் கோவில் குறுக்கு தெருக்கள் (கிழக்கு, மேற்கு), காமராஜ் தெரு, புதுகுளத்துபாளையம் குறுக்கு தெருக்கள், கே.எஸ்.பி தெரு, திருப்பூர் குமரன் தெரு, கண்ணதாசன் தெரு, சிவலிங்க ஆசாரியார் தெரு, டி.எச்.ஓ. தெரு, காமாட்சியம்மன் கோவில் தெரு, பிள்ளையார் கோவில் தெரு, பழைய போஸ்ட் ஆபீஸ் தெரு, பழனியப்பா தெரு, என்.எஸ்.கே.நகர் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 7.570 | 3.25 3.50<br>3.75<br>&<br>4.00 | 250.00 |
| 10 | சிப்பம்–10<br><br>வார்டு எண்.15, 16, 18, 20, 23 மற்றும் 27 ஆகிய பகுதிகளில் உள்ள பாலாம்மாள்புரம் தெற்கு மற்றும் வடக்கு தெரு, முஸ்லீம் தெரு, சங்கரன்பிள்ளை ஸ்டோர் தெரு, கோட்டையண்ணன் கோவில் தெரு, ரத்தினம் சாலை குறுக்கு தெரு, நீலிமேடு குறுக்குத் தெருக்கள், காமாட்சியம்மன் கோவில் தெற்கு மற்றும் வடக்கு தெருக்கள், திருப்பதி லே அவுட், பெரியசாமி நகர் குறுக்கு தெரு, சாத்தாணிசந்து, வீரபத்ரசந்து, நஞ்சையா தெரு கிழக்கு மற்றும் மேற்கு தெரு, கருப்பாயி கோவில் இறக்கம் தெற்கு மற்றும் மேற்கு குறுக்கு தெருக்கள், திண்டுக்கல் ரோடு குறுக்கு தெருக்கள், கிட்டு சாகிப் தெரு, மக்கள் பாதை குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 6.030 | 3.00 3.45<br>&<br>3.50 | 204.00 |
| 11 | சிப்பம்–11<br><br>வார்டு எண்.24, 25, 26, 29 மற்றும் 30 ஆகிய | 5.175 | 3.25<br>&<br>3.50 | 146.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பகுதிகளில் உள்ள வ.உ.சி., குறுக்கு தெரு, கெந்தபொடிக்கார தெரு, முல்லா சாகிப் தெரு, மாவடியான் கோவில் குறுக்கு தெரு, சேடர் சந்து, சாமியார் மைதானம், வஞ்சியம்மன் கோவில் குறுக்கு தெரு, வளையல்கார தெரு, குருசாமி தெரு, சின்ன வாய்க்கால் குறுக்கு தெருக்கள், திருமாநிலையூர் கிழக்கு தெருக்கள், காமராஜ் தெரு, தாந்தோணி குடித்தெரு, மற்றும் கொளந்தானுார் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | | | |
| 12 | **சிப்பம்–12**<br><br>வார்டு எண்.**36**, **37**, **38**, **39** மற்றும் **47** ஆகிய பகுதிகளில் உள்ள ஜி.ஆர். நகர் மெயின் ரோடு, **3**வது குறுக்கு தெரு முதல் **10**வது குறுக்கு தெரு வரை, ராம் நகர் குறுக்கு சாலை, மகாலட்சுமி நகர் குறுக்கு தெருக்கள், காமராஜர் நகர், காவேரி நகர் குறுக்கு தெருக்கள், அசோக் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்கள் ஆகிய பகுதிகளில் தார் சாலை அபிவிருத்தி செய்யும் பணி | 5.170 | 4.00 | 200.00 |
| | **மொத்தம்** | **63.055 கி.மீ.,** | | **ரூ.2650.00 லட்சம்** |

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6033/2020)**

தீர்மான எண்.**2584** அனுமதிக்கப்பட்டது.

**2)**கரூர் நகர எல்லைக்குட்பட்ட, லட்சுமி நாராயண சமுத்திரம் கிராமம், சர்வே எண். 400/A1, A2, A3, 401/1A, 2A, 3, 4Bல் **1.38** ஏக்கர் பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு.K.ராமசாமி மற்றும் இருவர் நகராட்சிக்கு விண்ணப்பித்ததனை தொடர்ந்து மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**401/2020**/க.மா, நாள்.**02.09.2020**ல் சாலை அமைப்பு வரைபடம் தயார் செய்து வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைத்து நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மனைப்பிரிவு உரிமையாளரால் தார்சாலை, வடிகால் வசதி, பாலங்கள் மற்றும் மின்விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் சாலையை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள நகர் மன்றம் தீர்மானஎண்.**2507**, நாள்.**29.10.2020**ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடம் ஆகியவற்றினை பத்திர பதிவு எண்.**8349/2020**–ன் படி நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்படி மனைப்பிரிவிற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.**401/2020**/க.மா, நாள்.**18.11.2020**–ல் ம.வ/மா.ந.ஊ.உ.இ(க.மா) எண்.**19/2020** என எண்ணிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மனைப்பிரிவில் உள்ள சாலைகள் முறையாக அமைத்து நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ம.வ/மா.ந.ஊ.உ.இ(க.மா) எண்.**19/2020**–க்கு மனைப்பிரிவு இறுதி அங்கீகாரம் வழங்கலாம். **(3310/2020/எப்1)**

தீர்மான எண்.2585 அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் நகர எல்லைக்குள், தோரணக்கல்பட்டி கிராமம், சர்வே எண்.441/2F, 2C, 442/A2, 442/A3, 439/Part, 440/Partல் 2.46 ஏக்கர் பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு.R.K.சிவசுப்பிரமணியம் மற்றும் 13 நபர்கள் நகராட்சிக்கு விண்ணப்பித்ததனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.1207/2020/திம2, நாள்.14.07.2020–ல் சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைத்து நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மனைப்பிரிவு உரிமையாளரால் தார்சாலை, வடிகால் வசதி மற்றும் மின்விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் சாலையை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள இந்நகர்மன்றத்தீர்மானம் எண்.2490, நாள்.30.09.2020–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் 19.10.2020–ம் தேதிய ந.க.எண்.35/2020/கமா கடிதத்துடன் ஏற்கனவே அனுப்பப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தில் சாலை அமைப்புகளில் மாற்றம் ஏதும் செய்யாமல் அளவுகளில் சில திருத்தங்கள் செய்தும் விடுப்பட்ட இரண்டு மூலை முடுக்குகள் குறியீடு செய்தும் திருத்திய சாலை அமைப்பு வரைபடம் வரப்பெற்றுள்ளது. எனவே, திருத்திய சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலை மற்றும் பொது உபயோக ஒதுக்கீடு இடங்களை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள நகர் மன்றம் தீர்மான எண்.2506 நாள். 29.10.2020 ல் தீர்மானித்துள்ளதை தொடர்ந்து மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடம் ஆகியவற்றினை பத்திர பதிவு எண்.8437/2020–ன் வாயிலாக நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்படி மனைப்பிரிவிற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.35/2020/க.மா, நாள்.13.11.2020–ல் ம.வ/மா.ந.ஊ.உ.இ (கமா) எண்.17/2020 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மனைப்பிரிவில் உள்ள சாலைகள் முறையாக அமைத்து நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதால் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ம.வ/மா.ந.ஊ.உ.இ (கமா) எண்.17/2020–க்கு மனைப்பிரிவு அனுமதி வழங்கலாம். (2150/2020/எப்1)

தீர்மான எண்.2586 அனுமதிக்கப்பட்டது.

4)அரசாணை எண்.G.O(M.S)No.99 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08.10.2018ல் கரூர் நகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டம் 2018–2019 (Infrastructure and amenities fund scheme)ல் ரூ.18.00கோடி மதிப்பீட்டில் இரயில் நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை வரை 40அடி இணைப்பு சாலை அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.18281/2016/டிஓ1, நாள்:16.11.2018ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 27.1.2018ம் தேதியன்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/s.KPD Contractors, Karur அவர்களது குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு 04.02.2019ல் மேற்படி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வரும்போது பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், இப்பணியில் பெரியகுளத்துபாளையம் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் எளிதில் இச்சாலையைப் பயன்படுத்தும் வகையில் குளத்துப்பாளையம் குகை வழிப்பாதை(Sub way) யிலிருந்து புதிதாக அமைக்கப்பட்டு வரும் சாலைக்கு அணுகுசாலை வடபுறத்தில் செல்லும் ஓடையின் இருபுறமும் கம்பியுடன் கூடிய தடுப்பு சுவர் அமைக்கவும், மேலும் வார்டு எண்.4 மற்றும் 5 பகுதிகளில் உள்ள பெரியார் நகர், வையாபுரி நகர், கே.வி.பி., நகர், செங்குந்தபுரம் பகுதி மக்கள் 40அடி இணைப்பு சாலையை எளிதில் அணுகும் வகையில் பெரியார் நகரிலிருந்து குகை வழிப்பாதை வரை அணுகுசாலை மற்றும் வடிகால் அமைக்கவும் தெரிவித்துள்ளார்.

இப்பணிக்கு அசல் மதிப்பீட்டில் கரூர் இரயில் நிலையத்திலிருந்து புகளூர் சாலை மேம்பாலம் வழியாக NH7 வரை இணைப்பு சாலை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கரூர் இரயில்

நிலையத்திலிருந்து ரத்தினம் சாலை வழியாக புகளூர் சாலை மேம்பாலம் வரை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தார்சாலை நல்ல நிலையில் உள்ளதால் அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள கரூர் இரயில் நிலையம் முதல் புகளூர் சாலை மேம்பாலம் வரை புதிதாக சாலை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் குளத்துப்பாளையம் குகைவழிப்பாதை முதல் தெற்குபுறம் பெரியார் நகர் சாலை வரை அணுகுசாலை அமைக்குமாறு அறிவுறுத்தியத்தின்படி ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக்கு மிகாமல் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் புகளூர் சாலை மேம்பாலம் முதல் NH7 வரை இணைப்பு சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளவும், 40அடி சாலை பணிக்கான அசல் மதிப்பீட்டில் இச்சாலையின் வடபுறத்தில் சுநவயபைேபே றயடட உயரம் 3.50மீ., உயர்த்தி கட்ட வேண்டியுள்ளதால், Plain cement concrete¡F gÂyhf RCC Counter fort Retaining Wall அமைக்க வேண்டியது அவசியமாகிறது. அதேபோல Toe wall Plain cement concrete மூலம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதை Site Condition படி கூடுதல் ஆழத்திற்கு மேற்கொள்ள வேண்டியுள்ளதால் Toe wall – Reinforced concrete with steel உடன் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இப்பணிகள் மேற்கொள்வதற்கான வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் IRTT பொறியியல் கல்லூரி, பெருந்துறை ஈரோடு அவர்களிடம் இருந்து பெறப்பட்டு, அதன்படி பணிகளின் வடிவமைப்பு தன்மைக்கேற்ப, நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமலும், ஒப்புதல் வழங்கப்பட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கும், ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை ரூ.1800.00இலட்சத்திற்கு மிகாமல் பணியினை மேற்கொள்ளவும் மற்றும் கூடுதல் பணிகளுக்கான ஒப்புதலை முதன்மை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/7170/2017)

தீர்மான எண்.2587 அனுமதிக்கப்பட்டது.

5)தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 - பிரிவு 303–ன் கீழ் கரூர் நகராட்சியில் தற்போது அமுலில் இருந்து வரும் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கு உரிமையாணை கட்டணங்கள் நகர்மன்ற தீர்மானம் எண்.1897 நாள்.30.12.2013 –ன் படி நகராட்சிகள் சட்டம் 1920 – பிரிவு 245,249,250,258,262,269 மற்றும் 270 –ன் கீழ்வரும் தொழில்களுக்கு 01.04.2020 முதல் தற்போது வசூலிக்கப்பட்டு வரும் உரிமையாணை கட்டணங்களை 50 % உயர்வு செய்து இணைப்பில் கண்டுள்ள பட்டியல் படி 01.04.2021 முதல் வசூல் செய்திடவும், இணைப்பில் வரிசை எண். 80 மற்றும் 81 ல் உள்ள புதிய தொழில்களுக்கு பட்டியலில் குறிப்பிட்டுள்ள உரிமையாணைக்கட்டணம் நிர்ணயம் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுதிக்கலாம்.

2)31.12.2013 –ஆம் தேதிய தீர்மான எண்.1897 –ன் படி 01.04.2014 முதல் நடைமுறையில் இருந்து வந்த உரிமையாணை கட்டணங்களை 50% உயர்வு செய்து 01.04.2021 முதல் திருத்திய உரிமையாணை கட்டணங்கள் வசூல் செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

3)உரிமையாணை கட்டணங்கள் உயர்வு செய்வது தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கான விளம்பரக் கட்டணத்திற்கு ஆகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவினம் செய்து கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் (அ8/ 7685 /2020)

தீர்மான எண்.2588 அனுமதிக்கப்பட்டது.

6)கரூர் நகர எல்லைக்குள் தாந்தோணி கிராமம் சர்வே எண்கள்.490/2டி, 2இ2, 2இ3 -ல் 1900 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தினை மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு.ஆர்.மனோகர், த/பெ.ராஜீவ் என்பவர் நகராட்சிக்கு விண்ணப்பத்தினை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி

இயக்குநர், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.3015/2019/திம2, நாள்.20.02.2020ல் சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகள் முறையாக அமைத்து நகராட்சி வசம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மனை உரிமையாளர் தார்சாலை அமைத்துள்ளதினை நகராட்சி பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து சாலை முறையாக அமைக்கப்பட்டுள்ளதால் சாலையை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளலாம் என 04.12.2020–ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே இம்மனைப்பிரிவில் உள்ள சாலைகளை நகராட்சி வசம் எடுத்துக்கொள்வது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி முறையாக தார்சாலை மற்றும் இதர வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி சாலைகளை நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எப்.1/9113/2019)

தீர்மான எண்.2589 அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்,
கரூர் நகராட்சி.